உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 04.06.2026 • மலர் 04 • இதழ்: 155 • வியாழக்கிழமை • Edition : Nagercoil • 04.06.2026 • Vol : 04 • Issue : 155 • Page : 4 • Rs. 5/-

### இந்தியாவில் அதிக இறக்குமதி செய்தாலும்

# கோயில்கள், தனிநபர்களிடம் 32 ஆயிரம் டன் தங்கம்

## மறு சுழற்சி செய்ய பிரதமர் மோடி யோசனை

புதுடெல்லி, ஜூன் 4

இந்தியாவில் தனிநபர்கள், கோயில் அறக்கட்டளைகளின் வசம் சுமார் 32 ஆயிரம் டன் தங்கம் இருப்பதாக தெரியவந்துள்ளது. இந்தியாவில் திருமணங்கள், பண்டிகைகள் வரை தங்கம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த இடத்தைப் பிடித்துள்ளது. ஆனால், இந்தியர்கள் ஒவ்வொரு ஆண்டும் தங்கத்தைத் தொடர்ந்து வாங்கி வருகின்றனர். இருந்தாலும் நாடு முழுவதும் உள்ள வீடுகளில் பயன்படுத்தப்படாத தங்கத்தின் ஒரு பெரும் கையிருப்பு ஏற்கனவே பூட்டி வைக்கப்பட்டுள்ளது

இந்தியாவில், வீடுகள் மற்றும் கோயில்களில் சுமார் 30,000 முதல் 32,000 டன்கள் வரை முடங்கி கிடப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அதன் மதிப்பு ரூ3.8 டிரில்லியன் டாலர்(ரூ.350 லட்சம் கோடி) ஆகும். இந்நிலையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த, புதிய தங்கத்தை இறக்குமதி செய்வதை தவிர்த்து, வீடுகளில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் தங்கத்தை மறுசுழற்சி செய்யுமாறு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு



சமீபத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார். புதிதாக இறக்குமதி செய்வதை விடுத்து, நம்மிடம் உள்ள தங்கத்தையே மறுசுழற்சி செய்யுங்கள்\ \" என்ற அவரது வேண்டுகோள், ஒரு புதிய விவாதத்தை தொடங்கி வைத்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு கிராம் தங்கமும், நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பைக் கரைக்கிறது. வர்த்தகப் பற்றாக்குறையை அதிகரிக்கிறது. இது பொருளாதாரத்தில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.வீடுகள் மற்றும் கோயில்களில் இருக்கும் தங்கத்தில் வெறும் 1 சதவீதத்தை ஆண்டுதோறும் மறுசுழற்சி செய்தாலே, இந்தியாவின் தங்க இறக்குமதி 25 முதல் 30 சதவீதம் வரை குறையும் என்று பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

அரசு, தங்கத்தை வங்கிகளில் டெபாசிட் செய்யும் திட்டங்கள், தங்க பத்திரங்கள் மற்றும் தங்க சேமிப்பு திட்டங்கள் மூலம் மக்கள் தங்கள் தங்கத்தை நிதி சந்தையில் பயன்படுத்த ஊக்குவிக்கிறது. அரசு திட்டங்கள் மூலம் தங்கத்தை வங்கிகளில் வைப்பு செய்தால், மக்கள் வட்டி வருமானம் பெறலாம். அதேசமயம், நாட்டின் நிதி நிலை வலுப்பெறும். உலகளவில் இந்தியா தங்கத்தின் மிகப் பெரிய நுகர்வோராக இருப்பதால், இந்த முயற்சி பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் ஆதாரமாக இருக்கும். 32,000 டன் தங்கம், சரியான திட்டமிடலால் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கும் என பொருளாதார வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

---

### குமரி மாவட்ட போக்குவரத்து போலீசாருக்கு

## குளிரூட்டும் கண் கண்ணாடிகள் மற்றும் பாதுகாப்பு கையுறைகள்

### காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் வழங்கினார்



நாகர்கோவில், ஜுன்04

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொது மக்களின் பாதுகாப்பிற்காக வெயில், மழை பாராமல் சாலைகளில் பணியாற்றும் போக்குவரத்து போலீசாரின் நலனை கருத்தில் கொண்டு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் முன்னெடுப்பில் நாகர்கோவில் அகர்வால் கண் மருத்துவமனை மற்றும் கேப் ஸ்டார்ட் நிறுவனத்தின் பங்களிப்புடன் அனைத்து போக்குவரத்து போலீசாருக்கும் குளிரூட்டும் கண் கண்ணாடிகள் மற்றும் கையுறைகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் உள்ள கம்யூனிட்டி ஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி, போலீசாரின் உடல்நலன் மற்றும் பணித்திறனை மேம்படுத்தும் மனிதநேய முயற்சியாக அமைந்தது. போலீசாரின் நலனில் தொடர்ந்து அக்கறை செலுத்தி வரும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இந்த நடவடிக்கைக்கு காவல்துறை வட்டாரங்களும் பொதுமக்களும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். இந்நிகழ்ச்சியில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையகம் கலையரசன், நாகர்கோவில் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் இளஞ்செழியன், ஆயுதப்படை துணை காவல் கண்காணிப்பாளர் கோவிந்தராஜு மற்றும் போலீசார் உடன் இருந்தனர்.

---

## சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி.யாக இருந்த சந்தீப் ராய் ரத்தோர் சிறைத்துறை டி.ஜி.பி.யாக மாற்றம்



சென்னை ஜூன் 4

தமிழக சட்டசபை தேர்தல், கடந்த ஏப்ரல் 23ந்தேதி ஒரே கட்டத்தில் நடத்தி முடிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு தேர்தல் ஆணைய உத்தரவின்படி, பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இதன்படி, தமிழகத்திற்கான பொறுப்பு டி.ஜி.பி.யாக சந்தீப் ராய் ரத்தோர் நியமனம் செய்யப்பட்டார்.

சட்டசபை தேர்தல் முடிந்து த.வெ.க. தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்ற நிலையில், தமிழகத்தின் புதிய டி.ஜி.பி. பதவிக்காக ராஜீவ் குமார், சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் மகேஷ் குமார் அகர்வால் ஆகிய 3 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான பட்டியல் யு.பி.எஸ்.சி.க்கு அனுப்பப்பட்டது.

இது தொடர்பாக டெல்லியில் நடந்த கூட்டத்தில் இந்த 3 பேர் கொண்ட பட்டியலுக்கு யு.பி.எஸ்.சி. ஒப்புதல் அளித்தது. இதனைத்தொடர்ந்து காவல்துறையில் மிக உயரிய பதவியாக விளங்கும் தமிழக டி.ஜி.பி. பதவிக்கு ஐ.பி.எஸ். அதிகாரியான மகேஷ்குமார் அகர்வால் நியமனம் செய்யப்பட்டார்.

அவர், சென்னை காமராஜர் சாலையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகத்தில் இன்று காலை பதவி ஏற்கிறார். இதனால், சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி.யாக இருந்த சந்தீப் ராய் ரத்தோர் சிறைத்துறை மற்றும் சீர்திருத்த சேவைகளுக்கான டி.ஜி.பி.யாக மாற்றப்பட்டு உள்ளார். இதேபோன்று கூடுதல் டி.ஜி.பி.யான கே. சங்கர், போதை பொருள் தடுப்பு பிரிவு கூடுதல் டி.ஜி.பி.யாக பதவியேற்க உள்ளார்.

---

## வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முதற்கட்ட நிவாரணத்துக்கான காசோலை: வன்னி அரசு



சென்னை, ஜூன் 4

சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

கடந்த 29.05.26 அன்று தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நெட்டூர் கிராமத்தில் முன்விரோதம் காரணமாக நடைபெற்ற சாதிய வன்முறையில் பாதிக்கப்பட்டு, திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேற்று நேரில் சென்று நடந்த சம்பவம் குறித்து கேட்டறிந்தேன்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரசன்ன குமார், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டீன் மருத்துவர் ரேவதி பாலன் உள்ளிட்ட அதிகாரிகளிடம் ஆலோசனை மேற்கொண்டேன். நடைபெற்ற சம்பவம் குறித்தும், இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் விபரம், இன்னும் தலைமறைவாக உள்ள குற்றவாளிகளை கைது செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சை விபரங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

மருத்துவமனையில் காயம் அடைந்தவர்களுடன், அவர்களது குடும்பத்தினரையும் சந்தித்தேன். நெட்டூர் கிராமத்தில் நிரந்தரமாக ஒரு புறக்காவல்நிலையம் அமைக்க வேண்டும், தங்கள் பகுதியிலேயே அரசு பொது விநியோகக்கடை, சமூகநலக்கூடம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

உடனடியாக அக்கிராமத்தில் புறக்காவல்நிலையம் அமைக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும், மற்ற கோரிக்கைகளை பரிசீலித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி அளித்தேன்.

குற்றமிழைத்தவர்களுக்கு விரைவாகவும், உறுதியாகவும் தண்டனை பெற்றுக் கொடுப்பதில் தான், பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கு அடிப்படையாக அமையும் என்பதை வலியுறுத்தி, வழக்கை விரைந்து நடத்திட காவல்துறைக்கு அறிவுறுத்தினேன். மேலும், முதற்கட்டமாக இந்த வழக்கில் தொடர்புடைய, தொடர் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டு வரும் நபர்கள் மீது குண்டர் சட்ட நடவடிக்கை பரிந்துரைக்கப்படும் என்று அவர்களிடம் தெரிவித்தேன். பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முதற்கட்ட நிவாரணத்துக்கான காசோலை வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கும் அரசின் சார்பில் நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவுறுத்தினேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

## "மீண்டும் வெற்றிச் சரிதத்தை எழுதுவோம்.." தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்



சென்னை, ஜூன் 4

முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதியின் 103வது பிறந்தநாள் விழா இன்று (புதன்கிழமை) கொண்டாடப்பட்டு வருகிறது. தி.மு.க. சார்பில் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி, மரியாதை செலுத்தினார்.

இந்நிலையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

தலைவரின் பிறந்தநாள்!

தமிழினத் தலைவரின் பிறந்தநாள்!!

மூப்படைந்து சக்கர நாற்காலியில் உட்கார்ந்த பின்பும் ஓய்வின்றி, தனது இறுதி மூச்சுவரை, தமிழினத்திற்காக தமிழ்நாட்டு மக்களின் உயர்வுக்காக உழைத்திட்ட உன்னதத் தலைவர்!

என்னை என்றும் இயக்கும் தலைவர் கலைஞர் அவர்களே...

வெற்றியைத் தலையிலும், தோல்வியை நெஞ்சிலும் ஏற்றாமல், சோதனைக் கடல்களைச் சோர்வின்றி நீந்திக் கடந்த உங்களது ஆற்றல் என்னிடமும் இருக்கிறது.

நீங்கள் நிறைந்தபோது, உங்களின் ஆற்றலை வேண்டினேன். அந்த ஆற்றலோடு தொடர் வெற்றிகளைப் பெற்று, தமிழ்நாட்டை வரலாறு போற்றும் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றோம். இப்போது, வெற்றி வாய்ப்பை இழந்திருக்கிறோம். எனினும் உங்களது ஆற்றல், என்னோடு மட்டுமல்ல, நீங்கள் உணர்வூட்டி வளர்த்தெடுத்த ஒவ்வொரு உடன்பிறப்பிடமும் இருக்கிறது.

உறுதியாய்ச் சொல்கிறோம்...

மீண்டும் வெற்றிச் சரிதத்தை எழுதுவோம்! உதயசூரியனின் ஒளியால் தமிழ்நாட்டைச் சூழ்ந்து வரும் இருளை விரட்டியடிப்போம்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## பெண் குழந்தைகளுக்கு எதிராகத் தொடரும் பாலியல் வன்கொடுமை: வேடிக்கை பார்க்கும் அரசு ஆர்.பி.உதயகுமார் கண்டனம்

சென்னை, ஜூன் 4

அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை, மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல, பொய்க்கால் குதிரை அரசு அமைந்து ஒரு மாதம் முடிவடையும் நிலையிலும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிப்பது கண்டு மக்கள் கொதித்தெழுந்துள்ளனர்.

கடந்த திமுக ஆட்சியில் 6 வயது குழந்தை முதல் 80 வயது பாட்டி வரை உள்ள பெண்கள் பாதிப்புக்குள்ளானார்கள். ஆனால், தற்போது 3 வயது பெண் குழந்தையைக்கூட சீரழிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் தொடர்ந்து நடைபெற்றவாறு உள்ளன. ஓரிரு நாட்களுக்கு முன்பு நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் 3 வயது மற்றும் 12 வயது பெண் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமை கேட்போர் மனதை வேதனைக்குள்ளாக்கி உள்ளது. குறிப்பாக பெண்களுக்கு எதிராக நடைபெற்ற வன்கொடுமைகள் ஒருசிலவற்றில் ஆளும் கட்சியினரே ஈடுபட்டுள்ளது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. பொதுவாக இளைஞர்கள் தங்களது எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கக்கூடிய படிப்பு, அவற்றைஅடைவதற்கானவழிமுறைகள்,பெரியவர்களை மதித்தல், போன்றவைகளுக்கு வழிகாட்ட வேண்டிய முதல்அமைச்சர், போகாத ஊருக்கு வழிகாட்டும் வேலையை நடத்திக்கொண்டிருப்பது வெட்கக்கேடான ஒன்றாகும். ஒரு தலைமுறை பாழாகும் சூழ்நிலை தற்போதைய ஆட்சியாளர்களால் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஒவ்வொரு பெற்றோர்களின் மனதிலும் எழுந்துள்ளது. முடிந்தால் இளைய சமுதாயத்தினரை இந்த அரசு நல்வழிப்படுத்தும் பணிகளில் இதய சுத்தியோடு ஈடுபட வேண்டும். தவறினால் தமிழ் சமுதாயம் இந்த ஆட்சியாளர்களையும், ஆட்சியை வழிநடத்துபவர்களையும் மன்னிக்காது என்று எச்சரிக்கிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

---

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

# கோவையில் கேஎஸ்ஆர் கோவை கார்டன் பிரீமியம் குடியிருப்பு மனைத் திட்டம் அறிமுகம்



கோவை ஜூன் :04

ராஜா குழுமத்தின் கேஎஸ்ஆர் ரியல்ட்டி நிறுவனம்,கோவை ஒத்தக்கால்மண்டபம்அருகே மைலேரிபாளையத்தில் அமைந்துள்ளதனது புதிய பிரீமியம் குடியிருப்பு மனைத் திட்டமான கேஎஸ்ஆர்கோவை கார்டன்திட்டத்தை ஜூன் 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் பிரம்மாண்டமாக அறிமுகப்படுத்துகிறது.

தென்னிந்தியாவின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றாக விளங்கும் கேஎஸ்ஆர் ரியல்ட்டி,தரமான உள்கட்டமைப்பு,வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் நீண்டகால முதலீட்டு மதிப்பை மையமாகக் கொண்டு பல்வேறு வெற்றிகரமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கோவையில்வேகமாகவளர்ந்துவரும் குடியிருப்பு மண்டலமான ஒத்தக்கால் மண்டபம் பகுதியில் அமைந்துள்ள கேஎஸ்ஆர் கோவை கார்டன் திட்டம், சிறந்த சாலை இணைப்பு,கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கிய நகர்ப்புற வசதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளது.

நவீன வசதிகளுடன் வடிவமைக்கப் பட்டுள்ள இந்தத் திட்டம்,குடும்பங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமையும்.

இது குறித்து கேஎஸ்ஆர் ரியல்ட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஆர் டி என்.கே. சுரேந்தர் ராஜ் கூறுகையில்நாங்கள் உருவாக்கும் ஒவ்வொரு திட்டமும் தரம்,நம்பிக்கை மற்றும் வாடிக்கையாளர்களின் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படுகிறது.

அறிமுக விழாவில் வாடிக்கையாளர்கள்,முதலீட்டாளர்கள் மற்றும் சேனல் பங்குதாரர்கள் பங்கேற்று திட்டத்தை நேரில் பார்வையிடுவதோடு,பிரத்யேக அறிமுக சலுகைகளையும் பெறலாம் என்று தெரிவித்தார்.

# தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவராக ரஞ்ஜீத் சிங் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்று க்கொண்டார்




தென்காசி, ஜூன் 4

தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவராக ரஞ்ஜீத் சிங் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (03.06.2026) பொறுப்பேற்று க்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில்

அனைவருக்கும் வணக்கம் நான் தென்காசி புதிய மாவட்ட ஆட்சியராக பதவியேற்றுள்ளேன். நான் 2016ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ் பிரிவை சேர்ந்தவன். இதற்கு முன்னதாக தேனி மாவட்ட ஆட்சியராக ஒரு வருடத்திற்கும் மேலாகப் பணியாற்றியுள்ளேன் ஆகவே எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முழு அர்ப்பணிப்புடன் (dedication) மக்களின் அனைத்து அடிப்படை வசதிகளுக்கும் தீர்வு காணும் வகையில் பணியாற்றுவேன் அதேபோல் முன்னாள் மாவட்ட ஆட்சியருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் நல்ல முன்னெடுப்புகளை நான் தொடர்ந்து முன்னெடுத்து செல்வேன்.

நிர்வாகக் கொள்கையில் மக்களுக்கான சேவை மற்றும் உடனடி பதிலளிக்கக்கூடிய (People centric and responsive governance) ஒரு நிர்வாகத்தை வழங்க முயற்சிப்பேன். பெரும்பாலான பிரச்சனைகள் சரியான நேரத்தில் பதில் கிடைக்காததாலேயே மீண்டும் மீண்டும் கோரிக்கைகள் வருகின்றன. ஆகவே பொதுமக்கள் வழங்குகின்ற கோரிக்கை மனுக்களை குறிப்பிட்ட காலத்திற்குள் (run time) பணிகளை தீர்வு காண்பது மூலம் மக்கள் ஓரளவுக்குத் திருப்தியடைவார்கள்.

அணுகுமுறை எப்பொழுதும் மக்களை எளிதில் சந்திக்கும் வகையில் (approachable) இருக்கும். நான் அடிக்கடி நேரடியாகக் கள ஆய்வுக்குச் செல்வேன். மக்கள் எப்போது வேண்டுமானாலும் என்னைத் தொடர்பு கொள்ளலாம் தொலைபேசியிலோ அல்லது நேரிலோ பார்க்கலாம் . அலுவலர்களுக்கும் உரிய சுதந்திரம் அளிக்கப்படும் அதே வேளையில் மக்களின் பிரச்சனைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண்பதில் அவர்களுக்குப் பொறுப்புணர்வும் (responsibility) இருக்க வேண்டும்.

ஏற்கனவே இருந்த ஆட்சியரிடம் சில விவரங்களைக் கேட்டுள்ளேன். மேலும் துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டத்திற்குப் பிறகு எங்குப் பணிகள் நிலுவையில் உள்ளதோ (pendency) அதனைக் கண்டறிவதன் மூலம் முழுமையான தீர்வு கிடைக்கும்.

தென்காசி மாவட்டத்தை பொறுத்தவரை பெரும்பாலும் விவசாயம் சார்ந்த மாவட்டமாகும் (Agrarian district). நான் ஏற்கனவே தேனி மாவட்டத்தில் பணியாற்றிய அனுபவம் இருப்பதால் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் அதிக கவனம் செலுத்துவேன். விவசாயிகளின் குறைகளைத் தீர்க்கவும் அவர்கள் அளிக்கின்ற கோரிக்கை மனுக்களுக்கு பதில் கிடைப்பதை உறுதி செய்யவும் ஒரு சிறப்பான முறை (system) அமைக்கப்படும். தென்காசி மாவட்ட விவசாயிகளுக்காகவும்விவசாய முன்னேற்றத்திற்காகவும் முழுமையாக பணியாற்றுவேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் உடனிருந்தார்.

# முதுநிலை மருத்துவப் படிப்பிற்கான இட ஒதுக்கீடு பறிக்கப்படுவதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்: சீமான்

சென்னை, ஜூன் 4

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவக்கல்லூரிகளில் முதுநிலை மருத்துவப் படிப்பிற்கு மொத்தம் 415 இடங்கள் உள்ளன. அவற்றில் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கு, முதுநிலை மற்றும் பல்நோக்கு சிறப்பு மருத்துவப் படிப்புகளில் வழங்கப்பட்டு வந்த 50% இட ஒதுக்கீடானது, இந்திய ஒன்றிய அரசால் நீட் தேர்வு அறிமுகப்படுத்தப் பட்டதன் பின்னர் தொடுக்கப்பட்ட வழக்கின் காரணமாக, கடந்த 2017ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் மூலம் நீக்கப்பட்டது.

இதனை எதிர்த்து, தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கம் (TNMOA) மாநிலம் முழுவதும் மிகப்பெரிய எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தது. அரசு மருத்துவர்களுக்கான இட ஒதுக்கீட்டு உரிமையை பாதுகாப்பதில் அன்றைய அதிமுக அரசு காட்டிய அலட்சியம் காரணமாக, அரசு மருத்துவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். அதன் பின்னர் ஊக்க மதிப்பெண்கள் வழங்கும் (Incentive Marks) முறை அறிமுகப்படுத்தப்பட்டது என்றாலும், அது அரசு மருத்துவர்களுக்கு சேர வேண்டிய நியாயமான வாய்ப்பை பெற்றுத்தரவில்லை.

அதனைத் தொடர்ந்து, 2018ம் ஆண்டு தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கம் சார்பில் இந்திய மருத்துவ கழகத்திற்கு (MCI) எதிராக வழக்கு தொடரப்பட்டது. நீண்டகால சட்டப்போராட்டத்தின் விளைவாக, கடந்த 2020ம் ஆண்டு அரசு மருத்துவர்களுக்கு 50% ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை சுப்ரீம் கோர்ட்டு வழங்கியது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு அரசாணை எண் 462ஐ பிறப்பித்து, முதுகலை மருத்துவ படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்கு 50% இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியது. இதனால் கடந்த 5 ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு மருத்துவர் பெருமக்கள் இழந்த தங்கள் உரிமையை மீண்டும் பெற்று வந்தனர்.

ஆனால் 2025 கல்வியாண்டிற்கான முதுநிலை மருத்துவப்படிப்பிற்கான சேர்க்கையில், அரசு மருத்துவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 219 இடங்களில் 151 இடங்கள் காலியாக உள்ள நிலையில், அவற்றை அனைத்திந்திய ஒதுக்கீட்டிற்கு மாற்ற சுப்ரீம் கோர்ட்டு கடந்த 29.5.26 அன்று உத்தரவிட்டுள்ளது. இதனால் தமிழ்நாடு அரசு மருத்துவர்களின் உயர்கல்வி உரிமை மீண்டும் பறிக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவர்கள் தங்கள் படிப்பை முடித்த பின் ஓய்வு பெறும் வரை அரசு மருத்துவமனைகளில் பணியாற்ற வேண்டிய கட்டுப்பாட்டில் உள்ளனர். எனவே அரசு மருத்துவர்களுக்கான இட ஒதுக்கீடு என்பது வெறும் கல்வி வாய்ப்பு அல்ல; அது மாநிலத்தின் பொது சுகாதார கட்டமைப்பை பாதுகாக்கும் உயர்நோக்கு கொள்கையாகும்.

மேலும், கடந்த சில ஆண்டுகளாக இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு (MCC) மருத்துவ கலந்தாய்வு நீட் மதிப்பெண் வரம்பினை(NEETcutoffpercentile)தொடர்ந்து குறைத்து வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அது முற்றிலுமாக (Zero percentile) குறைக்கப்பட்டது. ஆனால் இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு இந்த ஆண்டு திட்டமிட்டு நீட் மதிப்பெண் (cutoff) குறைப்பு அறிவிப்பை வேண்டுமென்றே வெளியிடாமல் தாமதப்படுத்தி, அனைத்திந்திய இரண்டாம் சுற்று கலந்தாய்வையும் நீட்டித்தது. அதன் மூலம் தமிழ்நாட்டில் காலியாக உள்ள சேவை இடங்களை இந்திய ஒதுக்கீட்டில் சேர்க்க முயன்று, அதனை சுப்ரீம் கோர்ட்டு வழக்கின் மூலம் தற்போது சாதித்துள்ளது. 'நீட்' மதிப்பெண் வரம்பு குறைப்புக்காக தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான அரசு மருத்துவர்கள் காத்திருக்கும் சூழலில், ஒன்றிய அரசு மாநில அரசுக்கு சொந்தமான உயர் மருத்துவ இடங்களை நீதிமன்றத்தின் மூலம் பறிப்பதென்பது மாநில உரிமையை பறிக்கும் அப்பட்டமான சூழ்ச்சியாகும்.

தமிழ்நாடு அரசு தன் வசம் உள்ள அரசு மருத்துவர்களுக்கான உயர் மருத்துவ இடங்களை தானே நிரப்பலாம் என்று சுப்ரீம் கோர்ட்டே அனுமதி வழங்கியிருந்த நிலையிலும், ஒன்றிய அரசு இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு மூலம் மாநில இடங்களை கைப்பற்ற முயல்வது கூட்டாட்சி தத்துவத்தை சீர்குலைக்கும் கொடுஞ்செயலாகும்.

சுப்ரீம் கோர்ட்டின் இந்த உத்தரவு தமிழ்நாட்டின் பொதுசுகாதார கட்டமைப்பையும், ஏழை மக்கள் அரசு மருத்துவமனைகளில் உயர் மருத்துவம் பெறும் உரிமையையும் நேரடியாக பாதிக்கும். மேகதாது அணைபோல, அரசு மருத்துவர்கள் உயர் மருத்துவம் பயிலும் விவகாரத்திலும் தவெக அரசு மெத்தனமாக இருப்பது தமிழ்நாட்டின் உரிமையை தாரைவார்க்கும் சிறிதும் பொறுப்பற்றச் செயலாகும். நீட் தேர்வு அறிமுகப்படுத்தியது முதலாக அதனை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்த்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக வினாத்தாள் கசிவுகள் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகளால் நீட் தேர்வு முறையே மிகப்பெரிய மோசடி என்பது மீண்டும் மீண்டும் உறுதியாகிறது. எனவே நீட் தேர்வு மதிபெண்ணை அடிப்படையாக கொண்டு உயர் மருத்துவப் படிப்பிற்கான வாய்ப்பை பறிப்பது அரசு மருத்துவப் பெருமக்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகும்.

ஆகவே, நம்முடைய அரசு மருத்துவர்கள் உயர் மருத்துவம் பயில, முதுநிலை மற்றும் பல்நோக்கு சிறப்பு மருத்துவப் படிப்புகளில் வழங்கப்படும் 50% இட ஒதுக்கீட்டை பாதுகாக்க தமிழ்நாடு அரசு உடனடியாக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



## கோவையில்

# கலைஞரின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்

கோவை ஜூன்:04

கோவை இடையர்பாளையம் திமுக பகுதி கழகம் சார்பாக முத்தமிழர் டாக்டர்.கலைஞர்அவர்களின்103வதுபிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டமுத்தூர் ரவி தலைமையிலும்,இடையர்பாளையம் பகுதி செயலாளர் மதியழகன் முன்னிலையிலும் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.பின்னர் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்கள்.

இதில் மாமன்ற உறுப்பினர்கள் சம்பத் குமார், வட்ட செயலாளர்கள் கிருஷ்ணராஜ், குமரேசன், ஆறுமுகம், மைக்கேல், ரஞ்சித்கமல்,காளிதாஸ்மற்றும்மாவட்ட நிர்வாகிகள் ஆர் சி தியாகராஜ், நாகராஜ், பகுதி நிர்வாகிகள் கண்ணகி, ஈஸ்வரன், சோனைசாமி,ராதா, குணசேகரன், ராசா,பாலசுப்ரமணியம் வைஷ்ணவி, மகளிர் தொண்டர் அணி சுமதி,மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# தேனி மாவட்ட மந்தைக்குளம் கண்மாய் வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணிகள்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

தேனி, ஜூன் 4

தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் பகுதியில் சிறப்பு தூர்வாரும் திட்டம் (20262027) கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் மந்தைக்குளம் கண்மாய் வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், 02.06.2026 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, வாய்க்காலில் தேங்கியுள்ள மணல், சகதி மற்றும் கழிவுகளை அகற்றும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், தூர்வாரும் பணிகள் தரமாகவும், விரைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். மழைக்காலங்களில் கண்மாய்களுக்கு நீர்வரத்து தடையின்றி கிடைக்கவும்,

நீர்நிலைகளின் நீர்த்தேக்க திறன் அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டம் உயரவும் இத்திட்டம் உதவும் என தெரிவிக்கப் பட்டது.

மேலும், விவசாய பயன்பாட்டிற்கான நீர் ஆதாரங்களை பாதுகாக்கும் வகையில் அனைத்து பணிகளும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் வலியுறுத்தினார்.

இந்த ஆய்வில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி நிர்வாக அதிகாரிகள் உடனிருந்தனர்




# பெண்களுக்கான இலவச பயிற்சி துவக்க விழா

தென்காசி, ஜூண் 4

இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDII) சார்பில், (Project SANKALP) சங்கல்ப் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்ட பெண்களுக்கான 20 நாட்கள் இலவச சிறுதானிய உணவுப்பொருட்கள் தயாரித்தல் பயிற்சி துவங்கியது.

இப்பயிற்சியில் சிறுதானிய லட்டு, சத்துமாவு, தோசை மிக்ஸ், இடியாப்பம் மிக்ஸ், பஞ்சு மிக்ஸ், சூப் மிக்ஸ், பிஸ்கட், பிரவுனி உள்ளிட்ட பல்வேறு சிறுதானிய மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப்பொருட்கள்தயாரித்தல் குறித்து நேரடி செய்முறை பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும், விவசாய விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல், ஊறுகாய், ஜாம், தொக்கு தயாரித்தல், விற்பனைத் திறன் மேம்பாடு மற்றும் தொழில் தொடங்குவதற்கான வழிகாட்டுதல்களும் வழங்கப்படுகின்றன.

பயிற்சியின் ஒரு பகுதியாக, தஞ்சாவூரில் அமைந்துள்ள தேசிய உணவு தொழில்நுட்ப மற்றும் தொழில் முனைவோர் மேலாண்மை நிறுவனம் (NIFTEM) சென்று தொழில்நுட்ப மற்றும் தொழில் சார்ந்த நேரடி கள ஆய்வும் மேற்கொள்ளப்பட உள்ளது.

நிகழ்ச்சியின் துவக்க விழாவில் தொழில் முனைவு அலுவலர் அசோக் வரவேற்புரை வழங்கினார். திட்ட மேலாளர் சத்யராஜ் தயாளன் குத்துவிளக்கேற்றி பயிற்சியை துவக்கி வைத்தார். தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் வாழ்வாதார மேம்பாட்டு மையத்தைச் சேர்ந்த விண்ணரசி மற்றும் PMFME மாவட்ட வள அலுவலர் ரமேஷ்குமார் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்து, வளர்ந்து வரும் பெண் தொழில்முனைவோர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பயிற்றுநரும் பெண் தொழில்முனைவோருமான நாக ரோகினி சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்ச்சியில் 40க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சி நிறைவில் பங்கேற்பாளர்களுக்கு இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் (EDII) சான்றிதழ் வழங்கப்படுகின்றன.



## விளாத்திகுளத்தில்

# திமுக சார்பில் முன்னாள் முதல்வர் கருணாநிதி 103 வது பிறந்தநாள் விழா

விளாத்திகுளம் ஜூன் 04.

முன்னாள் முதல்வர் கருணாநிதி 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பாரதியார் பேருந்து நிலையம் முன்பு அமைக்கப்பட்டுள்ள திருவுருவப்ப டத்திற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இந்த நிகழ்வில் திமுக ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு,அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, திமுக தேர்தல் பார்வையாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள்,வார்டு செயலாளர்கள், வார்டு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள், மாணவரணி அக்ஷய் மார்கண்டேயன், இளைஞரணி ஸ்ரீதர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் மண்டலம்1, வார்டு21, குமாரனந்தபுரம் பகுதியில் உள்ள வீடுகளில் தூய்மை பணியாளர்கள் பொது மக்களிடமிருந்து மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்குவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்க்கொண்டார். உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்

# தேனி மாவட்டம்: பள்ளிகள் திறப்பை முன்னிட்டு ஆட்சித்தலைவர் ஆய்வு



தேனி, ஜூன் 4

தேனி மாவட்டம் பள்ளிகள் திறப்பை முன்னிட்டு ஆட்சித்தலைவர் ஆய்வு கோடை விடுமுறை முடிவடைந்து 04.06.2026 அன்று பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட உள்ள நிலையில், மாணவர்கள் பாதுகாப்பாகவும் சுகாதாரமான சூழலிலும் கல்வி கற்க தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்யும் வகையில், தேனி மாவட்டம் வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட முத்துத்தேவன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. வைத்திநாதன் 02.06.2026 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது பள்ளி வளாகத் தூய்மை, வகுப்பறைகளின் பராமரிப்பு, குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள், மாணவர்களுக்கான அமர்வு ஏற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பள்ளி திறப்பிற்கான முன்னேற்பாடுகளை ஆய்வு செய்து, தேவையான பணிகளை முழுமையாக மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், பள்ளி திறக்கும் முதல் நாளிலிருந்தே மாணவர்களுக்கு சிறந்த கல்விச் சூழலை ஏற்படுத்த அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தினார்.




## தருமபுரி மாவட்ட தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில்

# விவசாயிகளின் கூட்டுறவு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி கையில் திருவோடு ஏந்தி நெற்றியில் நாமமிட்டு ஆர்ப்பாட்டம்

தருமபுரி , ஜூன் 4

தருமபுரிமாவட்டதமிழகவிவசாயிகள் சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு அரசின் கூட்டுறவு விவசாயிகள் கடன் தள்ளுபடி அறிவிப்பில் உள்ள குளறுபடிகளை நீக்கி விவசாயிகளின் கூட்டுறவு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி கையில் திருவோடு ஏந்தியும், நெற்றியில் நாமமிட்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலத் தலைவர் சின்னசாமி தலைமை தாங்கினார்.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது தமிழகமுதலமைச்சர்சிறுவிவசாயிகளின் கூட்டுறவு கடன் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் எனவும் மற்ற விவசாயிகளின் கூட்டுறவு கடன்களில் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் எனவும் அறிவித்தார்கள். ஆனால் அண்மையில் தமிழக அரசின் விவசாயிகளின் கூட்டுறவுகடன்தள்ளுபடி அறிவிப்புமிகவும் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. தமிழ்நாட்டு விவசாயிகளின் நம்பிக்கை தகர்க்கப்பட்டுள்ளது .

எனவே சிறு விவசாயி, பெரு விவசாயி என்ற பாகுபாடு இன்றி விவசாயிகள் பெற்ற கூட்டுறவு கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் எனக் கூறி தமிழக அரசு வலியுறுத்தி நெற்றியில் நாமம் போட்டும், கையில் தெருவோடு ஏந்தியும் , வஞ்சிக்காதே, வஞ்சிக்காதே, விவசாயிகளை வஞ்சிக்காதே ,தள்ளுபடி செய் தள்ளுபடி செய் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய விவசாய கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய் என்று கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தருமபுரி மாவட்டத்திலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பெருந்தலாக கலந்து கொண்டனர்.



## தருமபுரி நகர திமுக சார்பில்

# முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி பிறந்தநாள் விழா எம் பி பங்கேற்பு

தருமபுரி ஜூன் 04

தருமபுரி நகர திமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி 103 வது பிறந்தநாளை முன்னிட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் ஆ. மணி எம் பி தலைமையில் தருமபுரி நான்கு ரோடு அண்ணா சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், கேக் வெட்டியும் ,பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். இதில் முன்னாள் மாவட்ட செயலாளர் தர்மசெல்வன், மாவட்ட பொருளாளர் தங்கமணி, மாவட்ட துணைச் செயலாளர் ரேணுகாதேவி, நகர மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது ,கழக பேச்சாளர் டி. ஏ. ரவி, நகரத் துணைச் செயலாளர் வ. முல்லவேந்தன் ,நகர செயலாளர்கள் நாட்டான் மாது, கௌதம், கனகராஜ், பொன். மகேஸ்வரன் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



## தொண்டியில்

# ஆறு மாவட்ட வீரர்கள் பங்கேற்ற இறகு பந்து போட்டி; கிளப் தலைவர் சாதிக் பாட்சா தலைமை வகித்தார்

ராமநாதபுரம், ஜுன்4

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் ஆறு மாவட்ட இறகுப் பந்து போட்டி சிறப்பாக நடைபெற்றது. தொண்டி ராலிஸ் ஸ்போர்ட்ஸ் மைதானத்தில், தொண்டி ஸ்போர்ட்ஸ் கிளப் மற்றும் பயர் குரூப் இணைந்து நடத்திய ஆறு மாவட்ட அளவிலான இறகுப்பந்து (Badminton) போட்டி சிறப்பாக நடைபெற்றது. இந்த போட்டிக்கு கிளப் தலைவர் சாதிக் பாட்ஷா தலைமை தாங்கினார்.

போட்டியை மெட்ரோ பர்னிச்சர் நவாஸ்கான், ஐ எம்எஸ் லியாக்கத், சீத்தாராமன் மற்றும் ராஜசேகர் ஆகியோர் தொடங்கி வைத்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக பேட்மிட்டன் அசோசியேஷன் நிர்வாகி ராஜசேகர், ஆசிரியர் சக்தி, கோர்ட் ஓனர் மற்றும் நிர்வாகிகள், அப்துல் கரீம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

போட்டி முடிவுகள் மென்ஸ் ஓப்பன் பிரிவு முதல் பரிசு : தஞ்சை லோகேஷ் – பகுருதீன் இரண்டாம் பரிசு : காரைக்குடி வீரபாண்டியன் – வாட்சன் மூன்றாம் பரிசு: மதுரைபிரவீன்–கார்த்தி, காரைக்குடி வருண் – முருகன் 65 பிரிவு முதல் பரிசு : லோகேஷ் – குமார் (பட்டுக்கோட்டை) இரண்டாம் பரிசு : காதர் – வருண் (மீமிசல்) மூன்றாம் பரிசு : பிரேம் நசீர் – சஞ்சீவ் (மதுரை), வாட்சன் – சுரேஷ் 90 பிரிவு முதல் பரிசு : காதர் – சந்திரன் (மீமிசல்) இரண்டாம் பரிசு : பிரேம் நசீர் – சுபாஷ் மூன்றாம் பரிசு : பைசல் – குதுப்தீன் (தொண்டி), கார்த்திக் – செந்தில் (மதுரை) வெற்றி பெற்ற வீரர்களுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுத் தொகைகள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தொண்டி ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் சாதிக் பாட்ஷா தலைமையில், பைசல், குதுப்தீன், எஸ்.எம்.பி. இஸ்ஸத்தீன், சதிஸ் காமராஜ். ராஜ் டெய்லர் , ஜிப்ரிக், தேவேந்திரன், அப்துல்லா, சேகர், பெரியசாமி, பாலா, பயாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். இறுதியாக எஸ்.எம்.பி. இஸ்ஸத்தீன் நன்றிகூறினார். விளையாட்டு வீரர்களின் பங்களிப்பும், பொதுமக்களின் ஆதரவும் போட்டியை வெற்றிகரமாக நடத்த உதவியதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



## தருமபுரி மாவட்டத்தில்

# புதிய ஆட்சியருக்கு வாழ்த்து தெரிவித்து கோரிக்கை மனு வழங்கிய தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கம்

தருமபுரி ஜூன் 04

தருமபுரி மாவட்ட புதிய ஆட்சியராக சரவணன் ஐ ஏ எஸ் பொறுப்பேற்றுக் கொண்டதை தொடர்ந்து தருமபுரி மாவட்ட தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் மாவட்ட தலைவர் சுரேஷ் தலைமையில் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், மாவட்ட பொருளாளர் புகழேந்தி மற்றும் செய்தி தொடர்பாளர் ராமதாஸ் ஆகியோர் முன்னிலையில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஸ்ரீனிவாசன், துணைத் தலைவர் ரவி, நந்தகுமார், இணைச் செயலாளர்கள் குரு பிரசாத், சிங்காரவேலு, துணைச் செயலாளர் அருண்குமார், செயற்குழு உறுப்பினர்கள் பாலு , ஜெயம் சுரேஷ், கோவிந்தசாமி, பெரியசாமி சங்க உறுப்பினர்கள் மணிகண்டன், வெற்றிவேல் கண்ணையன், சரவணன், பாலமுருகன், வெங்கடேஷ், சுகுமார் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் சரவணன் ஐ.ஏ.எஸ் நேரில் சந்தித்து பூங்கொத்து கொடுத்தும், பொன்னாடை அணிவித்தும் வாழ்த்து தெரிவித்தனர். இதனை தொடர்ந்து பத்திரிக்கையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலி வீட்டுமனையில் மத்திய அல்லது மாநில அரசின் வீடு கட்டும் திட்டத்தின் மூலம் வீடு கட்டிதருதல், வீட்டுமனைப் பட்டா வழங்காமல் விடுபட்ட, மாவட்ட மற்றும் தாலுக்காவில் பணிபுரியும், பத்திரிகையாளர்களுக்கும் வீட்டுமனை பட்டா வழங்குதல், நலவாரிய அட்டை வழங்காமல் விடுபட்ட, மாவட்ட மற்றும் தாலுக்காவில் பணிபுரியும்,

பத்திரிக்கையாளர்களுக்கும் நலவாரிய அட்டை வழங்குதல், மறைந்த கலைஞர் தொலைக்காட்சியின் மாவட்ட செய்தியாளர் வேணுகோபால் அவர்களின் திருவுருவப் படத்தினை பத்திரிக்கையாளர் அலுவலகத்தில் திறந்து வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்துதல், மாவட்டத்தில் மற்றும் தாலுகாவில் பத்திரிக்கையாளர் என்ற பெயரில் பொய்யான செய்திகளை பரப்பி பத்திரிகையாளர்களின் பெயருக்கு அவதூறு பரப்பி வரும் போலி பத்திரிகையாளர்களை கண்டறிந்து அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட கோரிக்கை மனுவழங்கப்பட்டது.இந்தநிகழ்ச்சியில் தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்க நிர்வாகிகள், செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் (03.06.2026) வளர்ச்சிப்பணிகள் தொடர்பாகஅனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில், கூடுதல் ஆட்சியர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) ரஜத் பீடன், முன்னிலையில் நடைபெற்றது.

## கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சியில்

# கலைஞரின் 103 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

### ஊராட்சி மன்ற தலைவர் இனிப்பு வழங்கி கௌரவித்தார்



திருப்பத்தூர்:ஜூன்:04

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சியில் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் 103 வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எலவம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் மேனகாவிவேகானந்தன் முத்தமிழ் அறிஞர் டாக்டர்கலைஞரின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து, கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். மேலும் திமு கழகத்தில் தொடர்ந்து சோர்வின்றி உழைத்து வருவதாக கழக நிர்வாகிகளை கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில் பெருமாள், அஞ்சல் துறை கோவிந்தராஜ், வார்டு உறுப்பினர் மாலினி நந்தனார், முன்னாள் துணைத் தலைவர் ராமச்சந்திரன், வார்டு உறுப்பினர் குமரேசன்,சுப்பிரமணி, விஜய பிரகாஷ், அன்பு,சக்திமான், வடிவேல்,ரஞ்சித், மற்றும் கழக நிர்வாகிகள் என மலரும் கலந்து கொண்டனர்.

# த.வெ.க. சட்டமன்ற உறுப்பினருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்



திருப்பூர்: ஜூன் 04

திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பாலமுருகன் அவர்களை சந்தித்து திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றதற்கு வாழ்த்துக்கள் தெரிவித்து பொன்னாடை அணிவிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் மாநில செயலாளர் டி.டி.கே சித்திக். மாநகர செயலாளர் சாதிக் 20 வது வார்டு தலைவர் பாபு பூம்புகார் ராமு சிவாஜி செந்தில் தவெகஜவகர் ஐ என் டி எஸ் சி துரை சிவாஜி பொன்னுச்சாமி மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் த.வெ.க. கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருப்பூரில்

# ஆறு வயது "இளம் வாசிப்பு மேதை"



திருப்பூர்: ஜூன் 04

பல்லடம் கணபதி பாளையம் 40 ஆங்கில வார்த்தைகளை படித்து உலக சாதனை படைத்தார். பல்லடம் கணபதி பாளையம் ஜெயலட்சுமி இல்லத்தை சேர்ந்த குணா மனைவி மஞ்சு அவர்களின் மகள் 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறந்த அவிநாசிபாளையம் ஜெய் ஸ்ரீ ராம் மேல்நிலைப் பள்ளியில், 6 வயதான ஜி.எம். விதுஷா, கல்வித் துறையில் ஒரு இளம் வாசிப்பு மேதையாகத் தனது அசாதாரணத் திறமை மற்றும் குறிப்பிடத்தக்க சாதனைக்காக ஆசிய உலக சாதனைப் புத்தகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். என்பதை இதன்மூலம் சான்றளிக்கிறோம். இவ்வளவு இளம் வயதிலேயே அவரது சிறந்த வாசிப்புத் திறன்கள், கற்றலின் மீதான அர்ப்பணிப்பு மற்றும் அறிவின் மீதான ஆர்வம் ஆகியவை பலருக்கு உத்வேகம் அளித்து, அவரது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளன. இந்த மதிப்புமிக்க அங்கீகாரம், அவரது கல்வி மீதான ஆர்வம், அறிவுசார் மேன்மை மற்றும் வாசிப்பு மற்றும் கல்வியில் உள்ள அசாதாரண ஆற்றல் ஆகியவற்றைக் கௌரவிக்கிறது. அவர் எதிர்காலத்தில் மேலும் பிரகாசித்து, பெரும் வெற்றிகளை அடைய வாழ்த்துகிறோம். ஆசிய உலக சாதனைப்புத்தகத்தால் அங்கீகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தூத்துக்குடியில்

# கலைஞர் கருணாநிதியின் 103வது பிறந்தநாள் விழா



தூத்துக்குடி, ஜூன் 4

தூத்துக்குடியில் திமுக முன்னாள் தலைவரும், மறைந்த முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதியின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பல்வேறு நல திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர், திமுக வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் வழங்கினார்.

தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகில் மாநகர திமுக சார்பில் நடைபெற்ற விழாவிற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் தலைமை தாங்கினார். அங்குப் பொதுமக்களுக்குக் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, எட்டையாபுரம் சாலையில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தின் முன்பாக அமைந்துள்ள கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர், கழக கொடியை ஏற்றி வைத்த முன்னாள் அமைச்சர் கீதாஜீவன், இவ்விழாவில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், திராவிடர் கழக மாவட்ட தலைவர் முனியசாமி உட்பட கட்சி நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாநகராட்சி கவுன்சிலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்



சேலம் மாவட்ட கலெக்டர் தலைமையில்

# ஊரக வளர்ச்சி முகமை திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கூட்டம்

சேலம், ஜூன் 4

சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு அரசால் ஊரகப் பகுதிகளுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்வேறு திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டங்கள் அனைத்தும் ஊராட்சி பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு முழுமையாகவும் விரைவாகவும் கிடைத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படும் திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து இந்த ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் 20 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 385 கிராம ஊராட்சிகளில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம், நபார்டு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டு வரும் தார் சாலைகள் மற்றும் பல பணிகள் குறித்தும், கனவு இல்லம் திட்டம், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் வீடுகள் கட்டப்பட்டு வருவது குறித்தும் முதலமைச்சரின் வீடுகள் மறுக்கட்டுமான திட்டத்தின் கீழ் வீடுகள் சீரமைக்கும் பணிகள் குறித்தும் குழந்தை நேய பள்ளி உட்கட்ட அமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் புதிய வகுப்பறை கட்டட பணிகள் குறித்தும் தூய்மை பாரத திட்டம், ஜல்ஜீவன் திட்டம் போன்ற திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும்பணிகள், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம், பொது நிதி, 15 வது நிதி குழு மானிய திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடர்புடைய அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு பணிகளை குறித்த காலத்திற்குள் முடித்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குனர் வாணி ஈஸ்வரி, செயற்பொறியாளர் அன்பு முகன், உதவி இயக்குனர்கள் அருளாளன், லீமா குமார், உதவி திட்ட அலுவலர் சரவணன் உள்ளிட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் அனைத்து அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில்

# மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் பள்ளிக் கல்வித்துறை மீளாய்வு கூட்டம்

திருப்பத்தூர்:ஜூன்:5,

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு முடிவுகள் குறித்த மீளாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் தலைமையில் நடைபெற்றது. உடன் முதன்மைக் கல்வி அலுவலர் இரா.புண்ணியகோட்டி, மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) சத்தியபிரபா, மாவட்டக் கல்வி அலுவலர் என்.ராஜன், மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார்) நேசபிரபா, அரசு மற்றும் நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உள்ளனர்.



கிருஷ்ணகிரியில் டாக்டர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

# 1000 பேருக்கு அன்னதானம் வழங்கும் விழா மாவட்ட செயலாளர் தே.மதியழகன் துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி ஜூன் 4

கிருஷ்ணகிரி ராயக்கோட்டை மேம்பாலம் அருகே முத்தமிழரிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆயிரம் பேருக்கு அசைவ உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர் சந்திரன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் ரகுமான் ஷரீப், வேலுமணி, பொதுக்குழு உறுப்பினர் ஜெகதேவி கிருபாகரன், முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் செங்குட்டுவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், மூன்றம்பட்டி குமரேசன், சாந்தமூர்த்தி, இளையராஜா, அறிஞர், காந்தி, விஜி ராஜேந்திரன், தேங்காய் சுப்ரமணியன், சரவணன் , மகேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.சி.ஆர் தினேஷ் ராஜன், மாவட்ட பொறியாளர் அமைப்பாளர் காந்தி, அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் அருள்குமார், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சின்னதாய், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் அருகே

# நெல் கொள் முதல் நிலையம், அரிசி ஆலைகள் கலெக்டர் ரேவதி ஆய்வு



தஞ்சாவூர் ஜூன் 4

தஞ்சாவூர் அருகே நெல் கொள்முதல் நிலையம், அரிசி ஆலைகள் கலெக்டர் ரேவதி ஆய்வு செய்தார்

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு கோடை குறுவை பருவத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்முதல் செய்ய 126 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ப்பட்டுள்ளது. இதுவரை10, 471 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 8,094 டன் நெல் இயக்கம் செய்யப் பட்டு சேமிப்பு நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் தஞ்சாவூர் அருகே தளவாய் பாளையத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் நெல் கொள் முதல் செய்யும் பணிகளை கலெக்டர் ரேவதி நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்தார் .அப்போது அவர் நாள்தோறும் விவசாயிகளி டம் இருந்து கொண்டு வரப்படும் நெல்லின் அளவு குறித்தும், கொள்முதல் செய்யப்படும் நெல்லின் அளவு குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

மேலும் அவர் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதம், கணக்கீடு, எடை அளவு, பணிகளை யும் பார்வையிட்டு ஆய்வு செய்தார் அதை தொடர்ந்து அவர் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள அனைத் து நெல்லையும் உடனே இயக்கம் செய்து சேமிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அதிகாரிகளை அறிவுறுத்தினார்பின்னர் அம்மன் பேட்டையில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்த மான நவீன நெல் அறவை ஆலை யை கலெக்டர் ரேவதி பார்வையிட்டு நாள்தோறும் 100 டன் நெல் அரவை மேற்கொள்ளப்படும் பணி கள் குறித்து ஆய்வு செய்தார் மேலும் அவர் சேமிப்பு நிலையங்களில் இருந்து கொண்டு வரப் படும் நெல்லின் அளவு குறித்தும் அவை அரிசியாக மாற்றுவதற்காக செயல்படுத்தப்படும் நடைமுறை களான அவியல் பகுதி, அரிசியிலி ருந்து கருப்பரிசி உள்ளிட்டவை களை பிரித்து எடுக்கும் பகுதி ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் பொது மக்களி ன் பயன்பாட்டிற்காக அரவைச் செய்து அனுப்பப்படும், அரிசி அனைத்தும் உரிய முறையில் உயர்ந்த தரத்துடன் அறவை பணிகளை மேற்கொண்டு பொதுமக்களி ன் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என அறிவுறுத்தினார்

ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலகதியாகராஜன்தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் செல்வம் ,துணை மேலாளர் இளங்கோவன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்


வருவாய் கோட்டாசியர் அவர்கள்
திருப்பூர் மாவட்டம்.
நாள்:01.06.2026
ஒ.மு.0880/2026/ஆ2
திருமதி. மாரியம்மாள்
க/பெ. தங்கம்.
திருமுருகன் முத்து நகர், ஏ.வி. எஸ். நவீன் கார்டன், நெருப் பெரிசல், பூலுவப்பட்டி, திருப்பூர் மாவட்டம்.
பார்வை: மனுதாரர் திருமதி. மாரியம்மாள்
க/பெ. தங்கம் என்பவர் மனு நாள்:03.02.2026.
...மனுதாரர்.
இல்லை.
...எதிர் மனுதாரர்.
பொது அறிவிப்பு
மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திருமதி. மாரியம்மாள் என்பவரது தனது தாத்தா திரு. தங்கம் என்பவர். அன்று கடந்த 03. 08. 2023.திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேற்படி முகவரியில் இறந்தது தொடர்பாக, இறப்பினை அந்நேரத்தில் பதிவு செய்ய தவறிய நிலையில் காலதாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15. நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டா ட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
மனுதாரர்,
திருமதி. மாரியம்மாள்
க/பெ. தங்கம்.



## ஆவணம் காணவில்லை

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், குல்லலக்குண்டுகிராமம், 6/63தெற்குத் தெரு, கட்டக்கூத்தான் பட்டி போஸ்ட் சிலுக்குவார்பட்டி திண்டுக்கல் என்ற முகவரியில் வசித்து வருகின்ற சின்னச்சாமி மகன் திரு. கவியரசன் ( வயது 27 ) ஆகிய எனது கட்சிக்காரர் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால் பட்டா எண் : 637 மேற்படி ஆவணம் எனது கட்சிக்காரரின் அனுபோகத்தில் உள்ளது. மேலும் இந்த ஆவணத்தில் உள்ள சொத்தை ஈடுகாட்டி VERITAS FINANCE LTDல் கடன் கோரியபோது சொத்தின் அசல் ஆவணம் காணாமல்போனது தெரியவருகிறது. மேற்படி சொத்தின்மீது யாருக்கேனும் உரிமையோ, பின்தொடர்ச்சியோ இருப்பின் நாளது தேதி முதல் 7 தினங்களுக்குள் எழுத்து மூலம் தகுந்த ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதற்கு பின்னிட்டு வரும் எந்தவிதமான ஆட்சேபனையும் எனது கட்சிகாரரை எந்தவித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

D.KARUPPIAH, B.SC., B.L.,
ADVOCATE & NOTARY 33/24, KALIAMMAN KOVIL STREET,
Y.M.R. PATTY, DINDIGUL DIST.




கிருஷ்ணகிரியில்


# தமிழக அரசு பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூன் 4

தமிழகத்தில் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு தேர்தல் அறிக்கையில் வெளியிட்டவாறு பயிர் கடன்களை தள்ளுபடி செய்து உள்ளது. இந்த பயிர் கடன் தள்ளுபடி திட்டம் ஏமாற்றம் அளிப்பதாக விவசாயிகள் கடந்த சில நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.அந்தவகையில்கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் மாநில தலைவர் இராமகவுண்டர் தலைமையில் தமிழக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் தேர்தல் வாக்குறுதியில் ஆட்சிக்கு வந்தால் ஐந்து ஏக்கருக்கு குறைவாக உள்ள நிலங்களுக்கு விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றும், ஐந்து ஏக்கருக்கு மேல் உள்ள நிலங்களுக்கு 50 சதவீதம் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்தார். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் ரூ.50,000 கடன் தள்ளுபடியும், ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் உள்ள கடன்களுக்கு 5 ஆயிரமும் ரூபாய் தள்ளுபடியும் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் பொறுப்பேற்றுள்ள பாஜக அரசு தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தவாறு விவசாயி ஒருவருக்கு இரண்டு லட்ச ரூபாய் வரை கடன் தள்ளுபடி செய்துள்ளது. ஆனால் தமிழக அரசு விவசாயிகளை ஏமாற்றி உள்ளதாக கூறி, விவசாயிகள் கோசங்களை எழுப்பினார்கள். இந்த ஆர்பாட்டத்தினை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மாநில தலைவர் இராமகவுண்டர் விஜய் தலைமையில் ஆட்சி அமைய வேண்டி விவசாயிகள் அனைவரும் ஆதரவு அளித்தோம். ஆனால், எதிர்பார்த்தபடி விவசாயிகளின் கடன் தள்ளுபடி திருப்தி அளிக்க வில்லை முதல்வர் விஜய் அவர்களுக்கு யாரோ தவறான வழியை காட்டுகின்றனர். இதல் இருந்து முதல்வர் வெளியில் வர வேண்டும், தமிழக நிதி நிலையில் ரிசர்வ் வங்கி தலையிடுவதை நிறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். முதல்வர் விவசாயிகளின் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்வார் என்ற நம்பிக்கை, விவசாயிகள் மத்தியில் இருப்பதாகவும் குறிப்பிட்டார். இந்த ஆர்பாட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூரில்

# முத்து பல்லக்கில் விநாயகர் முருகன் வீதி உலா: நூற்றாண்டுகளுக்கு மேல் நடக்கிறது



தஞ்சாவூர் ஜூன் 4

தஞ்சாவூரில் நூறு ஆண்டுகளுக் கும் மேலாக நடைபெற்று வரும் முத்து பல்லக்கு விநாயகர் முருகன் அம்மன் வீதி உலா வந்தனர். இதில் திரளான பக்தர்கள்கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்

வரலாற்று பெருமை கொண்ட தஞ்சாவூர் நகரில் நடைபெறும் பாரம்பரிய விழாக்கள் ஒன்று முத்து பல்லக்கு விழாவாகும் திருஞான சம்பந்தர் சுவாமிகளின் குருபூஜையொட்டி இந்த முத்து பல்லக்குவிழாகடந்தநூறாண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது

இதையொட்டி தஞ்சாவூரில் உள்ள பல்வேறு கோவில்களிலிருந் து விநாயகர் முருகன் முத்துப்பல்ல க்கில் எழுந்தருளி 4 ராஜ வீதிகளி லும் உலா வருவார்கள் .அதன்படி இந்த ஆண்டு முத்து பல்லக்கு விழா நடைபெற்றது

அதன்படி கீழவாசல் வெள்ளை பிள்ளையார் கோவில், குறிச்சி தெரு சுப்பிரம ணிய சுவாமி, ஆட்டுமந்தை தெரு பால தண்டாயுத பாணி, சின்ன அரிசிக்காரர் தெரு பழனி ஆண்டவர், மகர் நோன்பு சாவடி சௌராஷ்டிரா தெரு, ஜோதி விநாயகர், தெற்கு ராஜ வீதி கமல ரத்தின விநாயகர், மேல ராஜவீதி சுப்பிரமணிய சுவாமி, மேல ராஜவீதி திருஞானசம்பந்தர், வடக்கு வாசல் பாலதண்டாயுத பாணி, மாமா சாகிப் மூலை சித்தி விநாயகர்,சுரேஸ் சத்திரம் சாலை பத்ரகாளியம்மன், காமராஜர் மார்க்கெட் செல்வவிநாயகர், கொடிமரத்து மூலை பால தண்டாயுதபாணி, மேல வெளி ஊராட்சி ரெட்டிபாளையம் சாலையில் உள்ள வெற்றி முருகன், தனலட்சுமி நகரை சேர்ந்த வலம்புரி விநாயகர் உள்பட பல்வேறு கோயில்கள் இருந்து விநாயகர் முருகனும் வண்ண விளக்குகளால் அலங்கரி க்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்ட முத்து பல்லக்கில் எழுந்தருளியி ருந்தனர்

பல்லக்குகள் பூக்களாலும் பல வண்ண காகிதங்களாலும் மின் விளக்குகளாலும் கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டு இருந்தன. இந்த பல்லக்குகள் அந்தந்த கோயில்களில் இருந்து புறப்பட்டுதஞ்சாவூர்தெற்குவீதி, மேலராஜவீதி ,வடக்கு ராஜவீதி, கீழ ராஜவீதி ஆகிய வீதிகளின் மேளதாளங்கள் முழங்க வாண வேடிக்கையுடன் வலம் வந்தன முத்து பல்லக்கு வீதி உலா இரவு தொடங்கி மறுநாள் காலை வரை விடிய விடிய நடைபெற்றது. இதில் தஞ்சை மட்டுமல்லாது சுற்றி உள்ள கிராமங்களை சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் . இதையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது

# கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா



கோவா ஜூன்:04

கோவை துடியலூர் மேற்கு பகுதி கழகம் சார்பில் பகுதி கழக அலுவலகத்தில் டாக்டர் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மரியாதை செய்து பொது மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி கலந்து கொண்டுஉரைநிகழ்த்தி, பொதுமக்களுக்கு உணவு வழங்கி சிறப்பித்தார்.

பகுதி கழக செயலாளர் இராஜசேகரன், ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில்தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியம்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தியாகு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்பிரபாகரன்,மாமன்ற உறுப்பினர் கற்பகம்,வட்ட கழக பொறுப்பாளர்கள் சம்பத்குமார்,சேது,ஈஸ்வரன்,மாதேஸ்வாமி,பகுதி கழக நிர்வாகிகள் இராக்கிமுத்து, பழனிச்சாமி,வெங்கடேஷ், ஜெயக்குமார்,காளிமுத்துசாமி, சின்னு, தங்கராஜ், ராஜ்கண்ணன்,அன்பழகன்,ஆனந்தன்,உதயகுமார்,சிவா, ராமலிங்கம்,நவநீதகிருஷ்ணன்,□ரதுரைசாமி,நடராஜன்,வடிவேலு, ஆறுச்சாமி, சாம்ராஜ்,அப்துல்ரசூல்,கனகராஜ், கனகு,பிரகாஷ், வின்சென்ட்,சந்துரு, சுரேஷ், எல்பிஎஃப் உதயகுமார்,லட்சுமணன் , மதன் , தினேஷ் , கருப்புசாமி,அன்பு,ஜீவா,தாமுண்ணன்,கனகு அண்ணன்பெல்லிராஜ்,யஸ்வந்த்,ராஜேஸ்வரி,சுலோச்சனா,இந்திராணி,சாந்தி,பூங்கொடி,செல்வி,ஸ்டெல்லா,பரமேஸ்வரி,பிருந்தா,லலிதா,விஜயா,இளையராணி,அனிதா,சந்தியா,சுஜித்ரா,சித்ரா,ரெபேக்கா,நிர்மலா,மல்லிகா,நித்யா, செல்வி.சௌந்தர்யா,உள்ளிட்ட பகுதி கழக,வட்டக் கழக நிர்வாகிகள், பிஎல்ஏ2, பிடிஏ,பிஎல்சி நிர்வாகிகள்,மகளிர் அணி நிர்வாகிகள்,இளைஞர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.